www.Padasalai.Net www.TrbTnpsc.com

Vnr11Acc

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

பதினொன்றாம் வகுப்பு

கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

பிரிவு – அ 20 X 1 = 20

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
அ) சமூகக் கணக்கியல் ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
இ) மேலாண்மைக் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்

2. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
அ) வணிகத் தனித்தன்மை கருத்து ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
இ) கணக்கியல் கால அனுமானம் ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை

3. இரட்டைப் பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும்போது நடவடிக்கைகள் பாதிப்பது
அ) குறைந்தபட்ச இரண்டு கணக்குகள் ஆ) ஒரே கணக்கில் வெவ்வேறு தேதிகளில்
இ) ஒரே கணக்கின் இரு பக்கங்களில் ஈ) குறைந்தபட்ச மூன்று கணக்குகள்

4. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹1,00,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹60,000 எனில் அந்நிறுவனத்தின் முதல்
அ) ₹1,60,000 ஆ) ₹60,000 இ) ₹1,00,000 ஈ) ₹40,000

5. உரிமையாளரால் தொழிலுக்கு கொண்டு வரப்படும் தொகைக்கு வரவு செய்யப்படுவது
அ) ரொக்க கணக்கு ஆ) எடுப்பு கணக்கு இ) முதல் கணக்கு ஈ) அனாமத்து கணக்கு

6. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூடுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்பு கட்டுதல்

7. இருப்பாய்வு கீழ்க்கண்ட எந்த கணக்குகளை உள்ளடக்கியிருக்கும்
அ) ஆள்சார் கணக்குகள் மட்டும் ஆ) சொத்துகள் கணக்குகள் மட்டும்
இ) பெயரளவு கணக்குகள் மட்டும் ஈ) அனைத்து கணக்குகளும்

8. விற்பனை ஏட்டின் மொத்தம் ஒரு குறிப்பிட்ட கால அளவில் வரவு வைக்கப்படுகிறது
அ) விற்பனை க/கு ஆ) ரொக்க க/கு இ) கொள்முதல் க/கு ஈ) உரிய குறிப்பேடு

9. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்.
அ) தபால் செலவு மற்றும் பயணச்செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருந்துகைகள் வாங்க ஈ) மூலப்பொருட்கள் வாங்க

10. ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகளை ரொக்க ஏட்டில் பதிந்தால் அது
அ) எதிர்ப்பதிவு ஆ) கூட்டுப்பதிவு இ) ஒற்றைப்பதிவு ஈ) சாதாரணப் பதிவு

11. வங்கிச் சரிக்கட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது
அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு
இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

12. ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹2,000 வங்கியால் பற்று செய்யப்பட்ட வங்கிக் கட்டணம் ₹50 ரொக்க ஏட்டில் பதியப்படவில்லை எனில் வங்கி அறிக்கையின்படி இருப்பு என்ன?
அ) ₹1,950 வரவு இருப்பு ஆ) ₹1,950 பற்று இருப்பு
இ) ₹2,050 பற்று இருப்பு ஈ) ₹2,050 வரவு இருப்பு

13. இயந்திரம் நிறுவுவதற்கு செலுத்தப்பட்ட கூலியைக் கூலிக் கணக்கில் பற்று வைப்பது
அ) பகுதி விடுபிழை ஆ) விதிப்பிழை இ) முழுவிடுபிழை ஈ) இருமுறை பதிந்த பிழை

14. இயந்திரத்தின் மீதான தேய்மானம் எந்த கணக்குப் பற்று வைக்கப்படுகிறது
அ) தேய்மானக் க/கு ஆ) இயந்திர க/கு
இ) வியாபார க/கு ஈ) தேய்மான ஒதுக்கு க/கு

15. குறைந்து செல் மதிப்பு முறையில் தேய்மானத் தொகையானது
அ) அனைத்து ஆண்டுகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும் ஆ) ஆண்டுதோறும் குறையும்
இ) ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஈ) மேற்கூறியவற்றில் எதுவுமில்லை

16. திரையரங்கத்தின் இருக்கை வசதியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்
அ) முதலினச் செலவு ஆ) வருவாயினச் செலவு
இ) நீள்பயன் வருவாயினச் செலவு ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

17. இருப்பாய்வில் தோன்றும் சம்பளம் எங்கு காண்பிக்கப்படும்.
அ) வியாபார கணக்கின் பற்று பக்கம் ஆ) இலாப நட்டக் கணக்கின் பற்று பக்கம்
இ) இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கம் ஈ) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கம்

18. இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படுவது
அ) அடக்கவிலையில் ஆ) சந்தை விலையில்
இ) அடக்கவிலை அல்லது சந்தை விலை இதில் எது அதிகமோ அந்த விலையில்
ஈ) அடக்கவிலை அல்லது நிகரத்தீர்வு மதிப்பு இதில் எது குறைவோ அந்த விலையில்

19. இருப்புநிலைக்குறிப்பு வணிகத்தின் ———— காண்பிக்கிறது.
அ) இலாபத்தினை ஆ) நிதிநிலையினை இ) விற்பனையை ஈ) கொள்முதலை

20. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள் ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள் ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்

பிரிவு – ஆ 7 X 2 = 14

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

21. கணக்கியலை வரையறு.
22. ஆதார ஆவணங்கள் என்றால் என்ன?
23. வியாபாரத் தள்ளுபடி என்றால் என்ன?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



24. ஈடுசெய் பிழை என்றால் என்ன?
25. கணினிமய கணக்கு என்றால் என்ன?
26. கீழ்க்காணும் குறிப்பேட்டுப் பதிவுகளுக்கு நடவடிக்கைகள் தருக.
அ) எடுப்பு க/கு ப
கொள்முதல் க/ கு
ஆ) கொள்முதல் க/ கு ப
வங்கி க/கு
27. சரிக்கட்டுப்பதிவு தருக: கொடுபடவேண்டிய வாடகை ₹2,000.
28. கீழ்க்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப்பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம்பெறுமா எனக் காட்டிடுக.
i) வட்டி பெற்றது ii) எடுப்புகள் iii) வாராகடன் iv) முதல்
29. பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் எனக் கூறவும்.
i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹10,00,000
ii) கட்டடத்திற்கு வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ₹80,000
30. ஒரு நிறுவனம் ₹80,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவனச் செலவுகள் ₹4,000 பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள் நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை கணக்கிடுக

## பிரிவு – இ

7 X 3 = 21

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

31. கணக்கின் பொன்னான விதியை எழுதுக.
32. குறிப்பேடு, பேரேடு வேறுபடுத்துக.
33. எதிர்ப்பதிவை உதாரணத்துடன் விளக்குக.
34. கணினிமயக் கணக்கியல் முறையின் மூலம் உருவாக்கப்படும் பல்வேறு வகையான அறிக்கைகளைப் பட்டியலிடவும்.
35. ஆள்சார், ரொக்க மற்றும் பெயரளவு கணக்குகளாக வகைப்படுத்துக.
அ) முதல் ஆ) கட்டிடம் இ) உள்தூக்கு கூலி ஈ) ரொக்கம்
உ) கழிவு பெற்றது ஊ) வங்கி
36. 2018 ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன.
சொத்துகள்: ரொக்கம் ₹40,000; சரக்கிருப்பு ₹50,000
ராம் என்பவரிடமிருந்து பெற வேண்டியது ₹20,000; இயந்திரம் ₹40,000
பொறுப்புகள்: விஜய் என்பவருக்கு செலுத்த வேண்டியது ₹10,000 தொடக்கப்பதிவு தருக.
37. கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக.

| சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|
| அ) ₹1,00,000 | = | ₹80,000 | + | ? |
| ஆ) ₹2,00,000 | = | ? | + | ₹40,000 |
| இ) ? | = | ₹1,60,000 | + | ₹80,000 |

38. பின்வரும் விவரங்களிலிருந்து ஜெயக்குமார் என்பவரின் 2016 டிசம்பர் 31–ம் நாளுக்குரிய வங்கிச் சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.
அ) ரொக்க ஏட்டின்படி இருப்பு ₹7,130 ஆ) செலுத்திய காசோலை வசூலாகாதது ₹1,000
இ) வாடிக்கையாளர் நேரடியாக வங்கியில் செலுத்தியது ₹800
39. இருப்பாய்வு தயாரிக்கப்பட்டபின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
அ) கொள்முதல் ஏட்டில் ₹10,000 அதிகமாக கூட்டப்பட்டுள்ளது.
ஆ) அறைகலன் பழுதுபார்ப்புச் செலவு ₹500 அறைகலன் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.
இ) அகில் நிலவனுக்கு கடனுக்கு ₹456 க்கு சரக்கு விற்றது. அவர் கணக்கில் ₹654 என் வரவு வைக்கப்பட்டுள்ளது.
40. கொள்முதல் ஏடு தயாரிக்கவும்.

2020 மார்ச்
1 அரவிந்திடம் சரக்கு வாங்கியது ₹24,000
4 நேகாவிடம் சரக்கு வாங்கியது ₹10,000
11 அனுவிடம் சரக்கு வாங்கியது ₹22,000
17 குமாரிடம் சரக்கு வாங்கியது ₹8,000

## பிரிவு – ஈ

7 X 5 = 35

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

41. அ) குறிப்பேட்டு பதிவுகள் தருக.

2020 மே
1 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹40,000
2 ரமணியிடமிருந்து ₹37,600 பெற்றுக் கொண்டு அவரது ₹38,000 க்கான கணக்கு தீர்க்கப்பட்டது.
3 குமாரிடமிருந்து கடன் பெற்றது ₹50,000
4 வங்கியில் செலுத்தியது ₹20,000
5 சொந்த செலவுக்கு சரக்கு எடுத்தது ₹40,000

(அல்லது)

ஆ) பின்வரும் நடவடிக்கைகளுக்கு கணக்கியல் சமன்பாடு தயாரிக்க.
அ) ராஜ் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹80,000
ஆ) வைப்புடன் வங்கி கணக்கு தொடங்கியது ₹60,000
இ) கடனுக்கு ஹரியிடமிருந்து சரக்கு வாங்கியது ₹24,000
ஈ) ராஜ் சொந்த செலவுக்கு ரொக்கம் எடுத்தது ₹2,000
உ) பற்று அட்டை மூலம் அறைகலன் வாங்கியது ₹20,000
42. அ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எழுதுக.

2017 ஜூன்
1 ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹1,00,000
4 ரொக்கம் கொடுத்து அறைகலன் வாங்கியது ₹12,000
7 ஹரீஷிடமிருந்து இயந்திரம் வாங்கியது ₹20,000
10 ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹8,000
18 காப்பீட்டு முனைமம் செலுத்தியது ₹200

(அல்லது)

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

ஆ) ராஜேஸ்வரியின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்க்காணும் இருப்புகளைக் கொண்டு 31 மார்ச் 2017 க்கான இருப்பாய்வு தயாரிக்க.

| விவரம் | ₹. | | ₹. |
|---|---|---|---|
| வங்கியிருப்பு | 14,000 | வாடகை வரிகள் | 2,000 |
| பற்பல கடனாளிகள் | 29,800 | வங்கி கட்டணம் | 200 |
| அறைகலன் | 86,000 | வாராக்கடன் | 2,000 |
| அலுவலக உபகரணங்கள் | 55,000 | எடுப்புகள் | 10,000 |
| சரிக்கட்டப்பட்ட கொள்முதல் | 1,40,000 | காப்பீட்டு முனைமம் | 2,000 |
| விற்பனை திருப்பம் | 1,500 | முதல் | 1,50,000 |
| இறுதி சரக்கிருப்பு | 7,500 | பற்பல கடனீந்தோர் | 32,000 |
| விற்பனை | 1,18,000 | கடன் (வ) | 50,000 |

43 அ) கீழ்க்காணும் நடவடிக்கைகளை கண்ணனின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு பதிவு செய்க.

2017 டிசம்பர் 1 சுமதியிடம் சரக்கு வாங்கியது ₹17,800
4 ராணிக்கு விற்றது ₹15,200
6 மணியிடம் சரக்கு வாங்கியது ₹7,000
10 சரண்யாவிற்கு விற்றது ₹12,500
17 ஹீசேனுக்கு விற்றது ₹13,250
21 ரகுவிடம் சரக்கு வாங்கியது ₹10,000
26 ரொக்கத்திற்கு ஷியாமிற்கு விற்றது ₹3,000 (அல்லது)

ஆ) வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிக்க.

அ) வங்கி அறிக்கையின்படி வங்கியிருப்பு ₹15,000
ஆ) விடுத்த காசோலை பணமாக்கப்படாதது ₹2,500
இ) வங்கி கட்டணம் ரொக்க ஏட்டில் பதிவாகவில்லை ₹500
ஈ) வங்கி வட்டி ரொக்க ஏட்டில் பதிவாகவில்லை ₹250
உ) நிலை ஆணையின்படி வங்கி செலுத்திய காப்பீட்டு முனைமம், ரொக்க ஏட்டில் பதிவாகவில்லை ₹300
ஊ) வங்கியில் செலுத்திய காசோலை வரவு வைக்கப்படாதது. ₹900

44 அ) கீழ்க்காணும் நடவடிக்கைகளிலிருந்து முப்பத்தி ரொக்க ஏடு தயாரிக்க.

| | | | ₹. |
|---|---|---|---|
| 2017 பிப்ரவரி | 1 | ரொக்கயிருப்பு | 25,000 |
| | | வங்கியிருப்பு | 10,000 |
| | 6 | காசோலை மூலம் நீர் சுத்திகரிப்பு இயந்திரம் வாங்கியது | 8,000 |
| | 8 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 9,000 |
| | 9 | டேனியலிடமிருந்து ரொக்கம் பெற்றது | 9,900 |
| | | அளித்த தள்ளுபடி | 100 |
| | 12 | விற்பனைக்கு காசோலை பெற்று, வங்கியில் செலுத்தியது | 40,000 |
| | 13 | அமலாவிற்கு செலுத்தியது | 14,500 |
| | | அவர் அளித்த தள்ளுபடி | 500 |
| | 15 | போக்குவரத்து செலவு செய்தது | 5,000 |
| | 16 | அலுவலக செலவுக்கு வங்கியிலிருந்து எடுத்தது | 20,000 |
| | 24 | குமாரிடமிருந்து காசோலை பெற்றது, உடனே வங்கிக்கு அனுப்பியது | 15,000 |
| | 28 | குமாரின் காசோலை அவமதிக்கப்பட்டது. | |

(அல்லது)

ஆ) ராம் கோ நிறுவனம் 1.4.2014 அன்று ₹2,00,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. நிறுவுகைச்செலவுகள் ₹10,000 செலவழித்தது. தேய்மானம் குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% நீக்கப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளுக்கு இயந்திர கணக்கை தயாரிக்கவும். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ல் கணக்குகள் முடிக்கப்பெறுகின்றன.

45. அ) கீழ்க்காணும் நடவடிக்கையிலிருந்து சில்லறை ரொக்க ஏடு தயாரிக்க.

| | | | ₹. |
|---|---|---|---|
| 2017 ஜனவரி | 1 | ரொக்கயிருப்பு | 250 |
| | 1 | தலைமை காசாளரிடம் பெற்றது | 1,050 |
| | 2 | பென்சில், ரப்பர், பேப்பர் வாங்கியது | 200 |
| | 4 | அஞ்சல் செலவுகள் | 120 |
| | 5 | பயணச் செலவுகள் | 150 |
| | 7 | பல்வகை செலவுகள் | 60 |
| | 9 | அலுவலக செலவுகள் | 50 |
| | 13 | அமுதாவிற்கு செலுத்தியது | 66 |
| | 14 | எழுதுபொருள் வாங்கியது | 175 |
| | 15 | பழுதுபார்ப்பு செலவுகள் | 78 |
| | 18 | தூக்கு கூலி கொடுத்தது | 83 |
| | 20 | அஞ்சல் தலை வாங்கியது | 55 |
| | 22 | தொலைபேசி கட்டணம் செலுத்தியது | 175 |

(அல்லது)

www.Padasalai.Net www.TrbTnpsc.com



ஆ) 31 டிசம்பர் 2016 இருப்பாய்வின் ஒரு பகுதி கீழே தரப்பட்டிருக்கிறது

| விவரம் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|
| வாராகடன் போக்கெழுதியது | 1,800 | |
| அளித்த தள்ளுபடி | 600 | |
| பற்பல கடனாளிகள் | 20,000 | 1,500 |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | | 500 |
| பற்பல கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு | | |

5% வாரா ஐயக்கடன் ஒதுக்கும் மற்றும் 2% கடனாளிகள் மீது வட்ட ஒதுக்கும் வியாபாரி பராமரிக்கிறார். இந்த விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக

46.அ) பின்வரும் நடவடிக்கைகளை முதலினம் மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.

அ) சரக்கு விற்பனை வாயிலாக பெற்றது ₹75,000

ஆ) வங்கியிடமிருந்து பெற்ற கடன் ₹2,50,000

இ) முதலீடு விற்பனை செய்தது ₹1,20,000

ஈ) கழிவு பெற்றது ₹30,000

உ) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹1,400

(அல்லது)

ஆ) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 31 டிசம்பர் 2017 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாப நட்ட கணக்கு தயாரிக்கவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 21,05,000 | அளித்த தள்ளுபடி | 30,000 |
| வியாபார செலவுகள் | 20,000 | அலுவலக மின் கட்டணம் | 19,800 |
| விற்பனை மீதான தூக்கு கூலி | 1,00,000 | பெற்ற கழிவு | 14,400 |
| சம்பளம் | 2,38,000 | கடன்மீது வட்டி | 22,000 |
| அஞ்சல் செலவு | 2,200 | எழுதுபொருள் | 14,000 |
| சட்ட செலவுகள் | 4,000 | ஏற்றுமதி வரி (விற்பனை மீது) | 23,000 |
| தணிக்கை கட்டணம் | 16,000 | இதர செலவுகள் | 5,000 |
| நன்கொடை கொடுத்தது | 11,000 | பயணச் செலவுகள் | 66,000 |
| பலவகை செலவுகள் | 3,600 | விற்பனை செலவுகள் | 53,200 |

47.அ) ஒரு நிறுவனத்தின் கணக்காளர் இருப்பாய்வு சமன்பாட்டால் ₹922 வித்தியாசம் (கூடுதல் செலவு) இருப்பதை அறிந்தார். அவர் அந்த தொகையை அனாமத்துக் கணக்கில் பதிந்துவிட்டு, அதைத் தொடர்ந்து பின்வரும் பிழைகளைக் கண்டறிந்தார்.

அ) ரொக்க ஏட்டின் வரவு பக்கம் உள்ள தள்ளுபடி பத்தியின் கூட்டுத் தொகை ₹78 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.

ஆ) கொள்முதல் ஏட்டின் கூட்டுத்தொகையில் ₹1,000 குறைவாக உள்ளது.

இ) கடனுக்கு நடராஜனுக்கு ₹375 க்கு சரக்கு விற்றது. விற்பனை ஏட்டில் ₹735 என்று பதியப்பட்டுள்ளது.

ஈ) மேகலாவுக்கு கடனுக்கு ₹700 க்கு சரக்கு விற்றது. கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிழை திருத்த பதிவுகளை தந்து அனாமத்து கணக்கு தயாரிக்கவும்.

(அல்லது)

ஆ) நாகராஜன் என்பவரின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட 2015 மார்ச் 31 ம் நாளைய இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| கொள்முதல் | 10,000 | விற்பனை | 15,100 |
| கூலி | 600 | பெற்ற கழிவு | 1,900 |
| உள் ஏற்றிச் செல் செலவு | 750 | வாடகை பெற்றது | 600 |
| விளம்பரம் | 500 | கடனீந்தோர் | 2,400 |
| வெளிதூக்கு கூலி | 400 | முதல் | 5,000 |
| ரொக்கம் | 1,200 | | |
| இயந்திரம் | 8,000 | | |
| கடனாளிகள் | 2,250 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 300 | | |
| சரக்கிருப்பு 1.1.2016 | 1,000 | | |
| | **25,000** | | **25,000** |

2016 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார இலாப-நட்ட கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

சரிக்கட்டுதல்கள்.

1) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹400

2) முன்கூட்டிச் செலுத்திய விளம்பரம் ₹150

3) கொடுபட வேண்டிய கூலி ₹200

4) 31.3.2016 அன்று இறுதி சரக்கிருப்பின் மதிப்பு ₹2,100

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com